**சார்பு நீதிமன்றம், சீர்காழி.**

**OS. 98/2022**

பெயர் : பன்னீர் (DW1) (Cross )

த/க/பெ. :

தேதி :21.01.2026

சாட்சி நீதிமன்றம் ஆஜராகி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

**வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

வாதிகள் என்ன பரிகாரம் கேட்டு வழக்கு போட்டுள்ளார்கள் என்பது எனக்கு தெரியாது. தாவா சொத்தின் சர்வே எண். 533/9 ஏ, 533/41. இந்த சர்வே எண்களுக்காக தான் வழக்கு போட்டுள்ளார். நான்கெல்லைகள் தெருவிற்கு கிழக்கு, வாய்காலுக்கு மேற்கு, குள்ளன் மனைக்கு கிழக்கு, பன்னீர் மனைக்கு தெற்கு. தாவா சொத்து புஞ்சை. சீர்காழி மாவட்ட உரிமையில் நீதிமன்றத்தில் வழக்கு நடந்த விபரம் தெரியும். அதில் அஞ்சலை பேரன் மற்றும் பவர் ஏஜெண்ட் ஜெயக்குமார் வழக்கு போட்டிருந்தார் என்றால் சரிதான். AS. 22/2012 வாதிகளுக்கு ஆதரவாக தீர்ப்பானது என்றால் சரிதான். 2ம் மேல் முறையீடு நான் தாக்கல் செய்தேன். சொத்தின் உரிமையை பொறுத்து தனி வழக்கு தாக்கல் செய்யலாம் என்று அதில் சொல்லி உள்ளார்கள் என்றால் சரிதான். நத்தம் பட்டா என்பது நீண்ட அனுபவத்தின் அடிப்படையில் குடியிருப்பவர்களுக்கு வழங்கப்படும் என்றால் சரிதான். மேலத்தெருவில் உள்ள அனைவருக்கும் நான் உட்பட நத்தம் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் வீடு இருந்தது என்பதால் பட்டா கொடுத்தார்கள். தாவா சொத்து புஞ்சை இல்லை நத்தம் வகைபாட்டை சேர்ந்தது என்றால் நத்தம் தான். தாவா சொத்தை பொறுத்து அஞ்சலைக்கு பட்டா கொடுத்தார்கள் என்றால் சரிதான். இதுநாள் வரை அஞ்சலை பெயரில் உள்ள பட்டாவை ரத்து செய்ய துறை ரீதியான நடவடிக்கை எடுத்துள்ளேனா என்றால் இல்லை. அஞ்சலை மீதோ அவர் வாரிசு மீதோ தாவா சொத்திற்கு வழங்கப்பட்ட பட்டா செல்லாது என்று வழக்கு போட்டுள்ளேனா என்றால் இல்லை. முந்தைய வழக்கில் தாக்கல் செய்த ஆவணங்களை தான் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் பி.வா.சா.ஆ. 2 ல் சர்வே எண். 533/ 9 ஏ அதில் 8 செண்ட் கிரயம் வாங்கப்பட்டுள்ளதாக என்று கண்டுள்ளது. இந்த விபரத்தை என் பிரமாண வாக்குமூலத்திலும், எதிர்வழக்குரையில் சர்வே எண். 533/ 9 ஏ புதிய புல எண். 533/41 என்று சொல்ல வில்லைஎன்றால் சரியல்ல. வழக்கிற்காக சொல்லி உள்ளதாக

பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அஞ்சலைக்கு பட்டா கொடுத்தது சர்வே எண். 533/41 என்றால் சரிதான். உட்பிரிவை உறுதி செய்ய ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா எனறால் இல்லை. 533 சர்வே எண். புல வரைபடம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. புல எண். 533 குறித்து எனக்கு வழங்கப்படவில்லை என்றால் சரிதான். புல எண். 533/9 க்கு வடக்கே தான் கிழக்கு மேற்கு தெரு உள்ளது என்றால் சரிதான்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

MUMTAJ

Digitally signed by MUMTAJ
Date: 2026.01.21 16:43:10 +0530